புத்தகம் - ௩. 1907ஞு சூலைமீ 1உ இலக்கம் - கக.

சுகாதார போதினி.

க ம் பிரிவு.

வைத்தியக் குறிப்புகள்.

முன்தொடர்ச்சி (Vol III. பக்கம் 74.)

மார்பு துடித்தல் ரோகச் சிகிச்சை.

காவுஜ பான் விராகனெடை-உ. பன்னீர் வார்த்திழைத்துலர்த்தின சந்தனம் விராகனெடை-உ, ரோஜாப்பூ விதழ் விராகனெடை-உ, ராமத்துளசி, காவுஜ பான்பூ, நெல்லிமுள்ளி, மஞ்சட்கடுக்காய்த்தோல் இவை வகை-க க்கு விராகனெடை-கவ, விதைநீக்கின திராக்ஷப்பழம் விராகனெடை-கஉ, குல்கந்து விராகனெடை-கஉ: சீனிசர்க்கரை விராகனெடை-உ௫.

செய்முறை:-சீனிசர்க்கரையையும், குல்கந்தையும் தவிர மற்றவைகளை யெல்லாம் மூன்று ஆழாக்கு ஜலத்திற்போட்டு ஒரு ஆழாக்கு ஜலமாகச் சுண்டினபின்பு நன்றாகப் பிசைந்து வடிகட்டித் திப்பிநீக்கின கஷாயத்தில் குல்கந்தைக் கரைத்து மறபடியும் வடிகட்டித் திப்பிநீக்கி அதிற் சர்க்கரையைச் சேர்த்துச் சிறுதீயா யெரித்துப் பாகுபதத்தில் இறக்கிச் சீஷாவில் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்,—விராகனெடை-உ, ௩.

உபயோகம்:—இருதயத் துடிப்பு, வீண்கவலை, இருதய தூர்ப்பலம் ஆகியவைகள் தீரும்.

வேறு.

புதிய சம்பங்கிப்பூ விராகனெடை-க, தேன், விராகனெடை-உ, இவ்விரண்டையு மென்று சாப்பிட வேண்டும். இவ்விதம் காலைமாலை யிரண்டுவேளையுஞ் சாப்பிட்டுவர இருதய அதிர்ச்சி, மனக்கவலை ஆகியவை தீரும்.

வேறு.

சிறு துத்தியிலைச்சாறு பலம்-உ, ஜலம் பலம்-க, சீனக்கற்கண்டுத் தூள் பலம்-ஞ, இவை யெல்லாவற்றையும் ஒன்றாக மிஸ்ரமித்துப் பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் காலைமாலை யிரண்டு வேளையும் சாப்பிட்டுவர, உஷ்ண சம்பந்தமான இருதயத் துடிப்பு, மனக்கவலை முதலியவைகள் தீரும்.

வேறு.

திருநூற்றுப் பச்சைவிதை விராகனெடை - ௩, இதனை அரை ஆழாக்கு ஜலத்தில்போட்டு காற்றுள்ள விடத்தில் வைத்துக் காலையில் சுமார் இரண்டு மூன்று விராகனெடை சர்க்கரையைச் சேர்த்துப் பீங்கான் கரண்டியால் கொஞ்சங் கொஞ்சமாகப் பானஞ் செய்யவேண்டும். இவ்விதம் பிரதி காலையிலுஞ் செய்துவர, உஷ்ண சம்பந்தத்தினு லுண்டான இருதய அதிர்ச்சி, திடுக்கம் ஆகியவைகள் தீரும். இந்த விதையானது இந்த வியாதிக்குச் சஞ்சீவிக் கொப்பானது.

வேறு.

இஸ்பகோல் விதை விராகனெடை - ௩, இதனை அரை ஆழாக்கு ஜலத்தில் மூன்றுமணி நேரம் ஊறவைத்து அதனை வடிகட்டி அதன் சோழையை மாத்திர மெடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு அதில் நான்கு விராகனெடை சீனிசர்க்கரையைச் சேர்த்துப் பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் தினம் ஒன்றிற்கு இரண்டு தடவைகள் செய்து வந்தால், உஷ்ண சம்பந்தமான மார்பதிர்ச்சி ரோகம் தீரும்.

வேறு.

நடுத்தரமான புளி (அதாவது அதிகம் புதிதல்லாதது அல்லது அதிகம் பழமை யல்லாதது) பலம்-உ, இதனை அரை ஆழாக்கு ஜலத்திற் கரைத்து ஓரிரவு வைத்துக் காலையில் அதின் தெளிவை மாத்திரம் இறுத்துக்கொள்ள வேண்டும். பிறகு அதில் அரைப்பலம் சீனிசர்க்கரையைச் சேர்த்துப் பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் பிரதி காலையிலும் பானஞ்செய்துவர, மலபந்தந் தீர்ந்து இருதய அதிர்ச்சி, மனக்கவலை ஆகியவைகள் தீரும்.

வேறு.

பிரதி காலையிலும் இரண்டு வெற்றிலைகளை மென்று தின்றுவர, குளிர்ச்சி சம்பந்தத்தினு லுண்டான இருதய அதிர்ச்சி, இருதயத் துடிப்பு, மனக்கவலை, ஆகியவைகள் தீரும்.

வேறு.

அரைக் குன்றிமணி யெடை அபினை ஆகாரத்திற்குப் பின் சாப்பிட்டுவர, உஷ்ண சம்பந்தமான இருதய அதிர்ச்சி தீரும்.

குறிப்பு.

இது ஆரம்பத்திற் குறைந்த அளவாக விருந்த போதிலும் நாளடைவில் இதனை விருத்திசெய்து நா

ளடைவில் லாகிரிப் பழக்கத்திற் கேதுவாகிவிடும். அ பின் சாப்பிடப் பழக்கமாகி விட்டால், பிறகு அதனை விடுவது இலேசான காரியமல்ல. ஆகையால் இவ்வித மான அவுடதங்களைக் கூடிய வரையில் அதிக ஜாக்கி ரதையுடன் உபயோகிக்க வேண்டியது.

வேறு.

துருஞ்சி நாரத்தம்பழச்சாறு பலம்-௧0, சீனிசர்க்கரை பலம்-௧0, இவ்விரண்டையுஞ் சேர்த்து ஷர்பத் தாகச் செய்து வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—விராகனெடை-ரு, ச.

உபயோகம்:—பித்த சம்பந்தத்தினு லுண்டான இருதய அதிர்ச்சி, இரைப்பை வியாதிகள், வாந்தி, அரோசகம், ஆகியவைகள் தீரும்.

வேறு.

சொண்டைக்கடலை விராகனெடை-ச, இதனை அரை ஆழாக்கு ஜலத்தில் ஓரிரவு ஊறவைத்து மறு நாட் காலையில் நன்ருகப் பிசைந்து ஜலத்தை மாத்திரம் வடிகட்டி அதிற் கொஞ்சம் சர்க்கரையைச் சேர்த்து இனிப்பாக்கிப் பானஞ் செய்யவேண்டும். இவ்விதம் பிரதி காலையிலும் பானஞ் செய்துவர, இருதய அதிர்ச்சி, மனத்திடுக்கம், இருதயச் சோர்வு ஆகிய வைகள் நீங்கும். இருதயம் பலப்படும். ஆனுல் இதனை உபயோகித்துக் கொண்டு வரும்போது புளிப்பு வஸ்துக்கள், கரப்பான் வஸ்துக்கள், ஆகியவைகளை நீக்கிவைக்க வேண்டியது.

வேறு.

வெட்டிவேர் பலம்-௨0, இதனைச் சன்னமாகத் துண்டித்து நான்குபடி ஜலத்திற்போட்டு இரண்டுநாளூறவைத்து மூன்ருநாள் வாலையிலிட்டு திராவகம் இறக்கிக் கொள்ள வேண்டும்,

பிரமாணம்:—பலம் - ௧௨. ரூ. பானஞ் செய்யும் போது கொஞ்சம் சர்க்கரை சேர்த்து இனிப்புண்டாக்கிக் கொள்ளலாம்.

உபயோகம்:—உஷ்ண சம்பந்தமான மார்பதிர்ச்சி, மனத்திடுக்கம் ஆகியவைகள் நீங்கும். மலபந்தம் நீங்கி அது கிரமப்படும். உஷ்ண சம்பந்தமான சுரம் ஆகியவைகளும் தீரும்.

வேறு.

மேற்ருேல் நீக்கின கொத்துமல்லி விதை, காவு ஜபான், இவை வகை-க-க்கு விராகனெடை-சு, ஏலக்காய், சம்பங்கிப்பூ, காவுஜபான்பூ, ரோஜாப்பூ, சந்தனத்தூள், இவை வகை-க-க்கு விராகனெடை-௧௫, தண்ணீரில் ஆழும்படியான அகர்க்கட்டை விராகனெடை-ரு, கஸ்தூரி விராகனெடை-வ, பசுவின் பால் படி-௨௨, ஜலம் படி-௧௨.

செய்முறை:—அகர்க்கட்டை, ஏலக்காய், கொத்துமல்லி ஆகியவைகளை நன்ருகச் சிதைத்து மற்றச் சரக்குகளையுஞ் சேர்த்து வாலையிலிட்டு திராவகம் இறங்கும் குழாயின் முனையில், கஸ்தூரியை மெல்லிய வஸ்திரத்தில் முடிந்து இறங்குந் திராவகமானது அதன் மூலமாக வரும்படியாய்க் கட்டித் தொங்கவிட வேண்டியது. பிறகு கிரமப்படி திராவகம் இறக்கி சீஷாவிற் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—பலம்-௧. ரூ.

உபயோகம்:—இருதயத் துடிப்பு, திடுக்கம், மனக்கவலை, இருதய துர்ப்பலம், ஆகியவைகளை நீக்கும். இருதயத்தைப் பலப்படுத்தி மனக்களிப்பை யுண்டாக்கும்.

வேறு.

சிவப்புச் சந்திரமல்லி பலம்-௨ச, இதனை இரண்டுபடி ஜலத்திற்போட்டு வாலையிலிட்டு ஒருசீஷா திராவகம் முறைப்படி இறக்கிக் கொள்ளவும், இந்த திராவகத்திற்கு சமன், அல்லது, அரைப்பங்கு பன்னீரைச் சேர்த்து மொத்த எடைக்கு அரைப்பங்கெடை சர்க்கரையைச் சேர்த்துப் பாகுபதமாகக் காய்ச்சிக் குளிர ஆறினபின்பு ஜஹர் மொஹரா என்னும் விஷநிவாரணக் கல்லை இழைத்த விழுது விராகனெடை-௧௨, மூங்கிலுப்புச் சூரணம் விராகனெடை-௧௨, இவ்விரண்டையும் அதிற் கலந்து சீஷாவில் விட்டுப் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-ரு, எ௨.

உபயோகம்:—இருதயத் துடிப்பு, இருதய அதிர்ச்சி, மனத்திடுக்கம், மனக்கலக்கம், ஆகியவைகள் தீரும். இருதயச் சோர்வை நீக்கி அதை பலப்படுத்தும். மனதிற்கு ஆனந்தத்தையும் களிப்பையு முண்டாக்கும்.

குறிப்பு.

மேற்கண்ட முறைகளெல்லாம் ஏகச் சரக்காலானவைகள், அல்லது, சுலபமானவைகள் என அலக்ஷியமாக எண்ணலாகாது. இது பார்வைக்குச் சுலபமாக விருந்தபோதிலும் இதனுலுண்டாகும் பிரயோசனம் அனந்தம்.

(இன்னும் வரும்)

சுகாதார போதினி.

௨ - ம் பிரிவு.

குடும்ப வைத்தியம்.

முன்தொடர்ச்சி (Vo - 3 - பக்கம் 74)

நவச்சார உப்பு விராகனெடை	௰
ரம்சாருயம் விராகனெடை	௫
சாதாசர்க்கரை ஷர்பத் விராகனெடை	௫
சுத்தஜலம் பலம்	௨௰

இவை யெல்லாவற்றையும் ஒன்ருக மிஸ்ரமித்து இரண்டு பாகமாக்கி தினம் இரண்டு தடவையாகப் பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் செய்துவர மதுமேகம் தீரும். பலங்குறைந்தவர்களுக்கு, அல்லது, வயது தளர்ந்தவர்களுக்கு நாட்பட்ட இருமலில் கோழை வெளிப்படாமலிருந்தால் அதாவது அதிக துர்ப்பலத்தினுல் கோழையை வெளிப்படுத்த ஏலாதவர்களா யிருந்தால், அவர்களுக்கு மேற்கண்ட மருந்தையுபயோகித்துவர, கபமானது தாராளமாக வெளிப்பட்டு இருமல் தணியும். அஜாக்கிரதையினுல் விஷமுண்டவர்களுக்கு இதனைக் கொடுக்க வாந்தியாகி வாந்தியுடன் அந்த விஷம் வெளிப்பட்டுப் போகும்.

வேறு.

நவச்சார உப்பு விராகனெடை	௨௰
நன்னுரிஷர்பத்து பலம்	௬௰

இவ்விரண்டையு மிஸ்ரமித்து தடவை யொன்றுக்கு ஆறு விராகனெடை வீதம் தினமொன்றிற்கு ஒன்று, அல்லது, இரண்டு தடவைகள் உபயோகித்துவந்தால், நாட்பட்ட சரும ரோகங்கள், புண்கள் முதலியவைகள் நீங்கும். இதனை யுபயோகிக்கும்போதுகொஞ்சம் பத்தியமாக உபயோகித்துவர வேண்டியது.

(இன்னும் வரும்.)

சுகாதார போதினி.

௩ - ம் பிரிவு.

ஸ்திரீ வைத்தியம்.

முன்தொடர்ச்சி (Vo. III-பக்கம்-75.)

சீனுக்கற்கண்டு பலம்-௪. இலவங்கம் பலம் - ௧, வேம்பாடம் பட்டை பலம்-௧, சுத்திசெய்த இரச கற்ரம் பலம் - ௧, பின்கண்டபடி சுத்தித்த நேர்வாளம் பலம்-௧, ஜாதிக்காய் பலம்-வ, வேகவைத்தூற்றின சிற்ருமணக்கெண்ணெய் படி-௰.

செய்முறை:—இரச கற்பூரத்தைக் கல்வத்திற் பொடித்துக் கொள்ளவேண்டும். இலவங்கம், ஜாதிக்காய், வேம்பாடம்பட்டை, ஆகிய மூன்றையும் ஒன்ருகச் சேர்த்திடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். கற்கண்டை சன்னமாகத் தூள்செய்து கொள்ளவேண்டும், வாளத்தை அம்மியில் வைத்து விளக்கெண்ணெயைச் சிறுகச் சிறுக விட்டு கொஞ்சமுந் திப்பி யில்லாமல் வெண்ணெய்போலாகிறவரையி லரைத்து மற்றச் சரக்குகளையும் ஒன்ருகச் சேர்த்துக் கலந்தரைக்க வேண்டும். எல்லாம் வெண்ணெய்போலானபின்பு எண்ணெயிற் கலக்கி மெல்லிய வஸ்திரத்தில் வடிகட்டி நின்ற திப்பியை மறுபடியும் அம்மியில் வைத்தரைத்து எண்ணெயிற் கலக்கி மறுபடியும் மெல்லிய வஸ்திரத்தில் வடிகட்டி மறுபடியும் நின்ற திப்பியையும் முன்போலரைத்து முன்போல் எண்ணெயிற் கலக்கிவிட வேண்டும். இவ்விதம் மூன்று தடவைகள் மடக்கி மடக்கிச் செய்யின் கொஞ்சமுந் திப்பி யில்லாமல் எல்லாம் அரைபட்டுப்போகும். பிறகு ஒருவாயகன்ற பீங்கான் பாத்திரத்தில் விட்டு வாய்க்கு மெல்லிய வஸ்திரத்தினுல் வேடுகட்டி வெயிலில் வைத்துவர வேண்டும். தொடர்ச்சியாக ஒருவாரம் வைத்தெடுத்துக் கொண்டால் மறுபடி வெயிலில் வைக்கவேண்டிய அவசியமில்லை. ஆயினும் இரண்டொரு வாரத்திற் கொருதடவை அல்லது, இரண்டு தடவை வெயிலில் வைத்துக்கொண்டு வந்தால் விசேஷந்தான். அப்படி வெயிலில்வைத்து வரும்போது தினம் இரண்டு மூன்று தடவைகள் குச்சியால் நன்ருகக் கலக்கியும் வரவேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-௰. ௧. ஆரம்பத்தில் தேக சுபாவத்தை நிதானித்துப் பிறகு கொஞ்சம் அதிகப்படுத்தியுங் கொள்ளலாம். காலையில் மாத்திரம் ஒரு வேளைதான்சாப்பிடவேண்டும். பேதி யிரண்டொரு தடவையானுற் போதுமானது, பேதி அதிகமானுல அளவைக்குறைத்துக் கொள்ள வேண்டியது. பேதி சுத்தமாக ஆகாவிட்டால் அளவைக் கொஞ்சம் அதிகப்படுத்தி க் கொள்ளலாம். தேக சுபாவம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி அனுபவத்தின் மீது இரண்டொரு தினத்தில் இதனளவை நிச்சயித்துக் கொள்ளலாம்.

அனுபானம்.—இளநீர், சுக்குக்கஷாயம், சோம்பு திராவகம், சோம்புக் கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்:—சூதகக்கட்டு, அக்கிரமமான சூதகம், சூதககாலங்களிலுண்டாகும் வயிற்றுநோய் முதலிய எல்லாவகை சூதகசம்பந்த ரோகங்கள், மலட்டுப்பூச்சி, மலட்டுவலி, மலட்டுநோவு முதலிய மலடு சம்பந்தமான வியாதிகள் ஆகியவைகள் தீர்ந்து கருப்பந்தரிக்கும். இன்னும் சூலை, மேகம், செங்கிரந்தி, விரைவாதம், கைகாற்பிடிப்பு, மேகஊறல் முதலிய அநேகரோகங்கள் தீரும்.

பத்தியம்:—வியாதி கடினமாயிருந்தால் உப்பில்லாபத்தியம் வைக்கவும், வியாதி இலகுவாயிருந்தால் இச்சாபத்தியம் வைக்கவும்.

குறிப்பு.

இதனை வியாதியின் பலத்திற்குத் தகுந்தபடி - ௫-நாள். ௭-நாள் உபயோகிக்க வேண்டியது. சூதகசம்பந்தமான வியாதியாயிருந்தால் சூதகங்காண வேண்டிய காலத்திற்கு முன்பு மூன்றுநாள், அல்லது, ஐந்துநாள் உபயோகித்து சூதகங்கண்டு சுத்த ஸ்நானத்திற்குப்பின்பு மூன்றுநாள், அல்லது, ஐந்துநாள் உபயோகிக்க வேண்டும். மலடு சம்பந்தமான ரோகமாயிருந்தால், சூதகங்கண்டு சுத்தஸ்நானத்திற்குப்பின்மூன்றுநாள் சாப்பிட்டு மூன்றுநாள் மறுபத்தியமிருந்து ஸ்நானஞ்செய்ய வேண்டும். இதனை உபயோகிக்கும் விதம் ஒவ்வொருவரின் தேகசுபாவம், வியாதிசுபாவம் ஆகியவைகளுக்குத் தகுந்தவிதமாக ஏற்படுத்தவேண்டியது. இதெல்லாம் அனுபவத்தில் இலகுவாகத் தெரிந்துகொள்வார்கள். இந்தஎண்ணெயினால் அநேகவித சுகிர்தங்களுண்டு. அவரவர்கள் அனுபவத்தினால் நிச்சயித்தறிந்து கொள்ளவேண்டும்.

எச்சரிக்கை.

நேர்வாளச்சுத்தி, இரசகற்பூர சுத்தி ஆகியவைகள் அநேகவகைகளுண்டு. ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவகை அநுபவப்பட்டேயிருக்கும். ஆயினும். இந்த முறையிற் சேர்பபதற்காகச் செய்யப்பட்டமுறைகளை நமது அபிமானிகளின் உபயோகத்திற்காக இங்கும் எழுதுவாம் அநேகருக்கு அம்முறைகளும்தெரிந்திருக்கலாம். அநேகருக்குத்தெரியாமலுமிருக்கலாம். எந்த வகை சுத்திசெய்ய வேண்டுமென அநேகர் சந்தேகப்படலாம். ஆகையால் -இதிற் சேரும் அனுபவமான முறையை யிங்கெழுதுவாம்.

நேர்வாளச் சுத்தி.

நேர்வாளக் கொட்டையை உடைத்துப் பருப்பெடுத்து மெல்லியவஸ்திரத்தில் தளர்ச்சியாக முடிந்து சாணிப்பாலிற்போட்டு வேகவைத்து எடுத்து உள்ளிருக்கிற முளை யிலையை நீக்கி அதற் கிரண்டுபங்கு பச்சரிசியுடன் கலந்து ஜலம்வார்த்து அரிசியானது நன்றாய் அழிந்தபத மாகிறவரையில் வேகவைத்து ஆறவிட்டுப் பருப்பையெடுத்து இரண்டு மூன்று தடவை ஜலம்வார்த்துச் சுத்தமாகக் கழுவியெடுத்துக் கொள்ளவேண்டும். பிறகு நிழலிலுலர்த்தி சோற்றுக் கற்றாழை மடலை யிரண்டாகப்பிளந்து அதற்குள் இந்தப் பருப்புகளைவைத்து நூலால்கட்டி அதன்மேல் மண்ணைப்பூசி நெருப்பில் வதக்கியெடுத்து நிழலில் உலர்த்தி யெடுத்துக்கொள்வதே அதன்சுத்தியாம்.

இரச கற்பூரச் சுத்தி.

இரச கற்பூரத்தை ஓட்டில்வைத்து முலைப்பாலினால் இரண்டு சமம் சுருக்குக்கொடுத்துப் பிறகு தேனினால் இரண்டுசாமம் சுருக்குக்கொடுத் தெடுத்துக் கொள்வதே இரசகற்பூர சுத்தியாம். இன்னும் இரசகற்பூரத்தை வேறு எந்த வகையாகவும் சுத்திசெய்து கொள்ளலாம், ஆயினும் நமது அநுபோக வைத்திய நவநீதத்தில் திவ்யமான அநேகமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளுள் ஒருவகை யாகவும் செய்து இந்த பாகத்திற் சேர்த்துக் கொள்ளலாம்.

(இன்னும் வரும்.)

சுகாதார போதினி.

௪-ம் பிரிவு.

பால வைத்தியம்.

முன்தொடர்ச்சி (Vol-III. பக்கம். 76.)

கணத்தெண்ணெய்.

வட்டத் துத்திவேர்பலம் - ௨௰, வெந்தயம் பலம்-௫, வெண்ணிறமான வெங்காயச்சாறு படி:வ, சிற்றாமணக்கெண்ணெய் பலம்-௪௰,

செய்முறை:—மேற்படிவேரைச் சன்னமாகத் துண்டித்து வாயகன்ற ஒரு ஜாடியிற்போட்டு அதன்மீது எண்ணெயைவிட்டு அதில் வெங்காயச்சாறு, வெந்தயம் ஆகியவைகளையும்போட்டு செவ்வையாகக் கு

னுக்கி வாய்க்கு வேடுகட்டி வெயிலில்வைத்து வரவேண்டும். கடு வெயிலாகவிருந்தால் இரண்டுவாரம் அல்லது இருபதுநாட் போதுமானது. ஆகையால் இதனை அதிக கோடைகாலத்திற்முன் செய்துகொள்ள வேண்டும்.

பிரமாணம்:—சிறுவர்களுக்கு துலா-வ, உ, பெரியவர்களுக்கு துலா-ஆ, க.

அனுபானம்:—சர்க்கரை ஷர்பத்து, நீராகாரம், சர்க்கரை முதலியவைகளுடன் அனுபானித்துக் கொடுக்கலாம். இவையின்றி இதனைத் தனியாகவும் உபயோகிக்கலாம். காலையில் ஒருவேளை மாத்திரந்தான் உபயோகிக்க வேண்டும்.

உபயோகம்:—எல்லாவகைக் கணரோகங்களும் தீரும். கணசம்பந்தமான கபரோகங்கள் முதலியவைகளும் தீரும், வெட்டைச்சூடு, அஸ்திச்சூடு ஆகியவைகளும் தீரும், இளைத்ததேகம் செழித்துப் பெருக்கும்.

பத்தியம்:—சீதள பதார்த்தங்கள், கரப்பான் பதார்த்தங்கள் ஆகியவைகளை நீக்கவேண்டியது.

குறிப்பு.

இந்தப்பாகத்தில் சிலர் ஒருவீசையெண்ணெய்க்குப் பதிலாக இரண்டுவீசை யெண்ணெய் சேர்த்துச் செய்வதுமுண்டு. ஆனால் அது கொஞ்சம் வேகங்குறைவாயிருக்கும். இஷ்டமானவர்கள் அப்படியும் செய்துகொள்ளலாம்.

குழந்தைகள் பெருக்க.

தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு, பசுவின் பால், வெள்ளாட்டுப்பால், தேங்காய்ப்பால், பசுவினெய், இவை வகை-க-க்குப் படி-வ, சீனிசர்க்கரை, கற்கண்டு, இவை வகை-க-க்குப் பலம்-டு.

செய்முறை:—கற்கண்டை மெல்லிய தூளாகச் செய்து மற்றெல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த் தடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து மெழுகுபதமாகச் சிவக்கும்போதிறக்கி வடிகட்டிப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-உ-ஈ. காலை மாலை யிரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—எல்லாவகை கணங்கள், கணச்சூடு முதலியவைகள் நீங்கி திரும்புபோல் மெலிந்ததேகம் தூண்போற்பெருத்து அழகும் வடிவுமுண்டாகும். வைத்திய ரகசியமுறைகளுள் இதுவுமொன்று.

கிருமிப் பிரயோகம்.

தேங்காய்க் கொப்பரையைப் பெருந்துண்டுகளாக அறுத்து நெல்லோடு வேகவைத்து சுமார் அரைப் பலம் குழந்தைக்குத் தின்னக்கொடுக்க வேண்டும். இவ்விதம் இரண்டு மூன்று நாட்கள் செய்யின் மலம் வழியாகக் கிருமிகள் வெளிப்படும்.

கக்குவானுக்கு.

கலியாண முருக்கிலை சுமார் பலம்-க, கருஞ்சீரகம் விராகனெடை-க. இவ்விரண்டையும் நன்றாக நசுக்கிச் சாறுபிழிந்து கொள்ளவும். இதிற் சுமார் விராகனெடை-க, க, உ, எடுத்து அதில் ஒரு குன்றிமணி யெடை கோரோசனையைச் சேர்த்துப் பானஞ்செய்விக்க வேண்டும். இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையுஞ்செய்ய கக்குவான் ரோகம் தீரும்.

இன்னும் வரும்.

கடிதங்கள்.

நமது நண்பர்களுள் அநேகர் லோகோபகாரமாகத் தத்தமக்கு அநுபோகமான பாகங்களை இப்போதினியின் மூலமாக வெளிப்படுத்தும் படியாக தயவு செய்திருக்கின்றார்கள். ஆனால் அவை யெல்லாவற்றையும் ஏககாலத்திற் வெளிப்படுத்த இப்போதினி இடந்தரா தாகையால் சமையம் வாய்க்கும்போது சிற்சில பாகங்களை எழுதி வருகின்றோம். ஜீவகாருண்ய சிந்தையுடன் இப்பாகங்களை யெழுதின கனவான்களுக்கு நாம் இதய பூர்வமாக நன்றி செலுத்தக் கடமைப்பட் டிருப்பதுபோலவே இப்பாகங்களாற் பிரயோசன மடையும் ஒவ்வொருவரும் மேற்படி கனவான்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டவர்களாக இருப்பார்க ளென்பது திண்ணம். இப்போதினியின் அபிமானிகளுள் அநேகர் சிறந்த பண்டிதர்களாக விருப்பதால் மற்றவர்களும் தத்தமக்கு அனுபவமானவைகளை இப்போதினியின் மூலம் வெளிப்படுத்த தயவு செய்வார்களேயானல், உலகத்தாருக்குப் பெரும்பிரயோசன முண்டா மென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இதுவரையில் மௌனஞ் சாதித்தது

போல் இனியுமிராமல் இப்போதாயினும் அனுபோக மான பாகங்களை மனமுவந் தெழுதுவார்களென நம் புகின்றோம்.

மேக உசிதப் பிரயோகம்.

நுணாவிலைச்சாறு பலம்-க, நல்ல கெட்டித்தேன் பலம்-உ, இவ்விரண்டையு மிஸ்ரமித்துப் பானஞ் செய்விக்கவேண்டும். இவ்விதம் காலையில் ஒருவேளை மாத்திரம், அல்லது, காலைமாலை யிரண்டுவேளையும் வியாதியின் பலத்திற்குத் தகுந்தபடி பதினேழுநாள், இருபத்தொருநாள், முப்பத் தொருநாள், நாற்பதுநாள்சாப்பிட வேண்டும். இவ்விதம் சாப்பிட்டு வரும்போது மேற்படி இலையை யரைத்து மேலுக்குப்பூசி இரண்டொரு சாமம் தாமதித்து ஸ்நானமுஞ் செய்துவர வேண்டும். இவ்விதம் உள்ளுக்கும் சாப்பிட்டு, மேலுக்கும் பூசிவந்தால் கருமேகம், கிரந்திப்புண்கள், சிரங்குகள், சொறிகள், மேகத்தாலுண்டான எல்லாவகைப் புண்கள் ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—கிரந்திப் பதார்த்தங்களை நீக்கி இச்சாபத்தியமா யிருக்கவேண்டியது.

அவுரி நெய்

(a) அவுரிவேர் பலம்-சு, சங்கம் வேர்ப்பட்டை முருங்கை வேர்ப்பட்டை, இவை வகை-க-க்குப் பலம்-உ. வேலிப் பருத்திவேர், சிவன்வேம்புவேர், சிறுகுறிஞ்சாவேர், மிளகரணைவேர், அழிஞ்சிவேர், கருநொச்சிவேர், இவை வகை-ங-க்குப் பலம்-க.

(b) செங்கத்தாரிப்பட்டை, மஞ்சட் கடுக்காய்த் தோல், கருஞ்சீரகம், ஓமம், அழிஞ்சிவிதை, கடுகு, ரோகணி, தேற்றும்பட்டை, உலர்த்தின கார்த்திகைக் கிழங்கு, உலர்த்தின மருட்கிழங்கு, கார்போகரிசி, கஸ்தூரி மஞ்சள், பொன்முசுட்டைவேர், கீழ்க்காய் நெல்லிவேர், எட்டிவிதை, இவை வகை-க-க்கு விராகனெடை-கவ, கடப்பம் விதை பலம் - க, பசுவினெய் படி-க.

செய்முறை:—(a) யிலுள்ள வேர் வகைகளைச் சன்னமாகத் துண்டித்துப் பதினாறுபடி தண்ணீரிற்போட்டு ஒருநாளூறவைத்து மறுநாள் அடுப்பேற்றி எட்டிலொரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டி திப்பி நீக்கின கஷாயத்துடன் நெய்யைச்சேர்த்து அடுப்பேற்ற வேண்டும், (b) யிலுள்ள சரக்குகளை யெல்லாம் ஒன்றாக இடித்து மேற்படி கலவையிற் சேர்த்துச் சிறுதீயா யெரித்துக் கடுகு திரள்பதத்திலிறக்கி வடிகட்டி பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-உ, ச.

உபயோகம்:—எலிகடி முதலிய எல்லா ஜீவவிஷங்கள், நாபி முதலிய மூலிகை விஷங்கள், பாஷாண முதலிய கடைச்சரக்கு விஷங்கள் ஆகியவைகள் தீரும், காணாக்கடி, பூரான்கடி, மரவட்டைக்கடி, ஈழையிருமல் முதலிய பல ரோகங்கள் தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி உப்பு, புளியை அறவே நீக்கியும், அவைகளை முறையே வறுத்தும், சுட்டும்சேர்த்தும், அவைகளைக் குறைவாக அல்லது மிதமாகச் சேர்த்தும்வர வேண்டியது.புகை, பெண் ஆகியவைகளை நீக்கவேண்டியது அவசிய மென்பது தெரிந்த விஷயமே.

பிரமி நெய்.

(a) பிரமிச்சாறு படி-ச, பசுவினெய் படி-க, (b) சிவதை வேர்ப்பட்டை, மேற்றோல் சீவினசுக்கு, அரிசித்திப்பிலி, நெல்லிவற்றல், இந்துப்பு, விளாலரிசி, கற்கண்டு, வசம்பு, கஸ்தூரி மஞ்சள் இவை வகை-க-க்கு விராகனெடை-ந.

செய்முறை:—(a) யிலுள்ள இரண்டையுங் கலந்து (b) யிலுள்ள சரக்குகளை யிடித்து மேற்படி சாற்றைக் கொஞ்சம் வார்த்து வெண்ணெய்போ லரைத்து அதிற் கரைத்து அடுப்பேற்றி ஒருமணி நேரம் சிறுதீயா யெரித்து கொதிப்பிக்க வேண்டும். இவ்விதம் மூன்றுநாள் தினமொன்றிற்கு ஒவ்வொரு மணிநேரம் சிறுதீயாகக் கொதிப்பித்து, நான்காநாள்மெதுவாயெரித்துக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டித் திப்பிநீக்கிப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-ங. டு. காலைமாலை யிரண்டுவேளையும் உபயோகிக்கலாம், அல்லது காலையில் ஒருவேளை மாத்திரம் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—வாயு சம்பந்தமான ரோகங்கள், கபசம்பந்தமான ரோகங்கள் ஆகியவைகள் தீரும். அ

க்கினிமந்தந் தீர்ந்து பசிதீபனமு முண்டாகும். தேகம் பொன்னிறமாகும், புத்திவிருத்தியும், புத்திக்கூர்மையு முண்டாகும்.

பத்தியம்:—கைப்பு, புளிப்பு பதார்த்தங்களை நீக்கவும்.

கண்டமாலை மெழுக்கு.

பால்துத்தம் விராகனெடை-கο, சுத்திசெய்தஇரசகர்ப்பூரம் விராகனெடை-ச, குங்குமப்பூ விராகனெடை-ஞ, பனங்கற்கண்டு பலம்-உ, கருங்கொள்ளுச்சாறு, அல்லது, சங்கங்குப்பிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சரக்குகளையெல்லாம் கல்வத்திற்போட்டு பொடித்து ஒருமணி நேரமரைத்து எல்லாம் ஒன்றாக மிஸ்ரமான பின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்து நான்கு குன்றிமணி யெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—மாத்திரை-க. இது வேகமான மருந்தாகையால் காலையில் ஒருவேளை மாத்திரம் அல்லது, காலைமாலை யிரண்டுவேளையும் ஐந்துவேளை கொடுக்கவேண்டும். காலமே மருந்து சாப்பிட்டவுடன் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானஞ்செய்து உடனே தயிரும் பழைய சாதமும் திருப்தியாகச் சாப்பிடவும். மத்தியானம் வெள்ளாட்டிறைச்சிச் சூப்பும் சாதமும் சாப்பிடவேண்டும். நெய் பச்சைப்பயறு வெங்காயம் ஆகியவைகளைத் தாராளமாகச் சேர்க்கவேண்டும். இராத்திரிக்கும் கூடுமான வரையிற் சாப்பிடலாம். பசுவின்பால் சேர்த்துக் கொள்ளலாம், வாயுபதார்த்தம், பச்சைமீன், புளி, புகை ஆகியவைகளைத் தள்ளவேண்டும்.

உபயோகம்:—கண்டமாலைகள், கிரந்திப் புண்கள் ஆகியவைகள் தீரும்.

குறிப்பு.

வியாதி கடினமாக விருந்தால் இடையில் இரண்டு மூன்றுவாரம் விட்டு விட்டு முன்கண்டபடி ஐந்துவேளை மூன்றுவேளை உபயோகிக்க வேண்டும்.

இதனைத் தயவுடன் முழுதும் வாசித்துத் தங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுக்கவும்.

மகா ஆனந்த புருஷகெம்பீர ஹல்வாவும், திலாவென்னும் மேற்பூச்சும்.

தளர்ந்த நரம்புகளை உற்சாகப் படுத்தவும், சோர்ந்த பேசிநரம்புகளைப் பலப்படுத்தவும், மேற்பூச்சு மாத்திரம் அதிகமாக உபயோகப்படாது. ஆகையால் மேற் பிரயோகத்துடன் உட்பிரயோகமும் ஆவசியகம். பாலியச் சேஷ்டையினாலும், அறியாமையினாலும்உண்டான தாதுநஷ்டம் முதலிய வியாதிகளுக்கெனபலவித விசித்திர நாமங்களோடு, வெளிப்பட்டுலாவும்போலி விளம்பரங்களை நம்பி ஏமாந்துபோகிறவர்கள்அனேகம். மேற்கண்ட ஔஷதங்கள் அவ்விதமானவைகள் அல்லன. இவை பரம்பரையாகவும்,நெடுநாள் அநுபவ சித்தமாகவும், கைவல்லியமான முறைகள். ஒருவரிருவரல்ல. நூற்றுக்கணக்கான அநேகராக உபயோகப் படுத்தப்பட்டுக் குணங்காணப் பட்டவைகள்; இது பல்லாண்டுகளாய் இரகசியமாக வைக்கப்பட்டு வந்தபோதிலும், இதனையுண்டு அநுபவித்த நண்பர்களில் பலரின் விருப்பத்தின்படி லோகோபகாரமாக இப்போது வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

பாலிய சேஷ்டையினாலும், அறியாமையினாலும் முற்றும் போக நிர்வாக சக்தியற்று, தாது நஷ்டமடைந்து நிராசையானவர்களும், இதனை உபயோகித்தால் கடவுளினது கிருபையால் அவர்களுக் குண்டான துர்க்குணங்கள் நீங்கி, தேகசக்தி, போகசக்தி முதலியவையுண்டாகும். பல சிகிச்சைகளினாலும் தீராமல் கைவிடப்பட்ட தாது நஷ்டப்பட்டவர்களும் அவநம்பிக்கைப் படாமல் இதனை உபயோகிப்பதினால்கடவுளினது கிருபையால் தங்கள் கோரிக்கையைப் பூரணமாய் அடைவார்களென்பது நிச்சயம். இதன் பெருமையைப்பற்றி எழுதுவதானால் அதிக விரிவெய்தும். ஆகையால் இதனையுண்டு அனுபவிப்பவர்கள்

தாம்தாமே தெரிந்துகொள்ளக் கூடுமாகையால் இங்கு சுருக்கமாகக் காண்பிக்கப்பட்டது. மேற்கண்ட ஔஷதங்களை இருபதுநாள் உபயோகித்தால் சோர்ந்து, வாடி, வதங்கியிருக்கிற தேகமானது, செழித்து, தளிர்த்து, மதத்து, தேகபுஷ்டி, தேகவன்மை, மனோற்பலம், தைரியம், வீரியம் முதலியவைகளுண்டாகும். இதனைத் தொடர்ச்சியாக உபயோகித்துவந்தால், காயசித்தியையுண்டாக்கும் ஒரு அரிய கற்பத்திற்கிது ஒப்பாகும்.

இதன் விலை மேற்கண்ட ஹல்வா 20 நாள் மருந்துள்ள டப்பி - 1, 20 - நாள் உபயோகிக்கத் திலாவென்னும் மேற்பூச்சு சிறு சீஷா-க-ஆக இரண்டும் ரூபாய் 10.

வி - பி - சார்ஜ் பிரத்தியேகம். இவை கீழ்க்காணும் விலாசதாரரிடத்திற் கைவிலைக்கும் வி - பி - மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

அகஸ்தியர் பள்ளு.

இந்நூதன கிரந்தம் இதுவரையிலச்சாகி வெளிவரவில்லையென்பது நிச்சயம். பற்பலவித கஷ்டப்படுத்தும் துஷ்ட ரோகங்களுக்கு நானாவித யோகங்களான சூரணம், புகை, உசிதப் பிரயோகம் முதலிய நூதன முறைகள் இதில் சொல்லப்பட்டிருக்கின்றன. இரசவாதத்திற்கு ஆகியாகிய அயச்செம்பு, துருசுச்செம்பு வகைகள், கெந்தகச்செம்பு, காரீயச்செம்பு, மிருதார்சிங்கிச் செம்பு, லிங்கச்செம்பு, முதலியவைகளும், அவற்றின் போக்குகளுமான அநேக வகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சாதாரணமாகவும் சுலபமாகவும் கிடைக்கக்கூடிய கடைச்சரக்குகளால் இலகுவாகச் செய்யக்கூடியவைகள். இவை யுத்தி புத்தி அனுபவம் முதலியவைகளுக்கொத்தவைகள். வழிதுறையின்றித் தன்னுயுளையும் பொருளையும் அவமே யழித்து ஏமாந்துபோகும் முறைகளைப் போன்றவைகளல்லன. இரசவாதம் பொய்யெனச் சாதிப்பவர்களும் நம்பத்தக்க அறிகுறியான அருமைநூல். இவை பலதடவை அனுபவப்பட்டவைகளாகையால், கிரமப்படி செய்பவர்களுக்கு எல்லா வகையாலும் லாபத்திற்கே பேதுவானவைகள். இரசவாதம் தெரிந்துகொள்ள இச்சையுள்ளவர்களுக்கு இதுவே முதனூலும் ஆதி நூலுமாம். கற்றோர் மற்றோர் முதலிய யாவருக்கும் பிரயோசனப் படும்படி தெள்ளிய தமிழ்வசன நடையிலும் எழுதப்பட்டிருக்கிறது. இகபர சுகானுபவங்களை யிச்சிப்பவர்களுக்கவசியமான நூல். இதன் அருமை பெருமை இதனைப் பார்வையிடுபவர்களுக்கு இதனைப் பார்வையிட்ட தக்ஷணமே தெரியுமாகையால், இங்கு விரித்தெழுதாது விடுத்தனம். பிரதி - க - க்குக் கைவிலை 1-2-0 வி - பி 1 - 4 - ०.

தன்வந்திரி சூக்ஷ்ம வைத்தியம்.

இதுவும் இதுவரையில் அச்சாகி வெளியாகாத நூதன சிறிய கிரந்தம். இதில் பற்பல வகை மாத்திரைகள், எண்ணெய்கள், குழித்தைலங்கள், ஸ்நான தைலங்கள், உசிதமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவை அதிக சூக்ஷ்மமானவைகளும் பல தடவை அநுபவப்பட்டவைகளுமாம். இதனைப் பார்த்த தக்ஷணமே அநுபவசாலிகளுக்கு இதன் சீரும் சிறப்பும் நன்றாய் விளங்கும். தம்முடையவும் தம் மின ஜன பந்து மித்திரர்களின் க்ஷேமத்தை விரும்பும் ஒவ்வொருவர் கையிலும் அவசியம் இருக்கத்தக்கது. பிரதி -1 - க்கு கைவிலை ரூபா 0-5-0. வி-பி 0-7-0.

ஞாய அஷ்டாங்க தீபம்.

இது - ஸ்ரீ - ல - ஸ்ரீ - தே - வே - வாலாம்பிகைதாச சுவாமிகளாற் செய்யப்பட்ட ஒரு சிறந்த ஞான நூல். ஆத்மரக்ஷிப்பிற்கு அவசியமான யோகமுறைகள் யாவரும் தெரிந்துகொள்ளும்படியாக மிகவும் தெளிவாகவும், சுருக்கமாவும் சொல்லப்பட்டிருக்கின்றன. படிப்போரும் கேட்போரும் ஆனந்தப் படும்படியாக வெண்பா, துறை, ஆனந்தக்களிப்பு, கும்மி முதலிய பல வண்ணங்களாகச் செய்யப்பட்டிருக்கிறது. தன்ரக்ஷிப்பை விரும்பும் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்கத்தக்கது.

இதன் பிரதி-1-க்கு கைவிலை 0-4-0, வி-பி 0-6-0

இராஜ அவுடத சாலை. 12 - வது நெ. அப்புமேஸ்திரி தெருவு, மாபுஸ்கான்தேவடி. மத்ராஸ்.